Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை-25 | 10-12-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை -296




சபாநாயகரின் செயலுக்கு எதிராக

# த.தே.கூட்டமைப்பினர் எதிர்ப்புப் போராட்டம்

# பாராளுமன்றம் ஒருமணிநேரம் ஒத்திவைப்பு!

## சபாநாயகர் மன்னிப்புக் கோரினார்

(கொழும்பு)

**சிறிலங்கா பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின்றி பேரினவாதக்கட்சிகள் இணைந்து பிரேரணைகளை நிறைவேற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் நடத்திய போராட்டத்தால் நேற்றும் பாராளுமன்றத்தில் அமளிதுமளி ஏற்பட்டு ஒரு மணிநேரம் ஒத்திவைக்கப்பட்டது. இதையடுத்து கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் பின்னர் சபாநாயகர் மன்னிப்புக் கோரியதையடுத்து பாராளுமன்ற அமர்வு சுமுகமாக நடைபெற்றது.**

நேற்று சபாநாயகர் லொக்கு பண்டார செங்கோலைத் தாங்கிய படைக்கல சேவிதர் சகிதம் அவைக்குள் பிரவேசிக்கமுற்பட்ட போது சற்றும் எதிர்பாராத விதத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் இருபத்தியிரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும் வரிசையாக நின்று சபாநாயகரை அவைக்குள் நுழைய விடாது தடுத்தனர்.

இதனால், அரச தரப்புப் பிரதிநிதிகள் அமரும் இடத்தினூடாக கடும் பிரயத்தனத்தின் மத்தியில் சபாநாயகர் தமது ஆசனத்திற்குச்சென்றார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் மகாவலி அபிவிருத்தி, விவசாயம், காணி, கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், எரிபொருள், மின்சக்தி மற்றும் வர்த்தக நுகர்வோர் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதம் நடைபெறவிருந்த சமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் உரையாற்றுவதற்காக சபாநாயகரைக் கேட்டிருந்தார் ஆனால்,நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில்

(IV ஆம் பக்கம் பார்க்க)

-சனாதிபதியின் பணிப்புரைக்கமைய-

## மகேஸ்வரனின் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டுள்ளது

ஐ.தே.க.பாராளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு நேற்று அதிகாலையுடன் திரும்பப் பெறப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதி செயலகத்திலிருந்து விடுக்கப்பட்ட பணிப்புரை ஒன்றின் பேரில் இது திரும்பப்பெறப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன், நேற்று சபாநாயகர் வி.ஜே.மு.லொக்கு பண்டாரவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இது தொடர்பாக பாராளுமன்றத்தில் சிறப்புரையாற்றி ஒழுங்குப் பிரச்சினையையும்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## எஸ்.பி.யின் நடத்தையைப் பொறுத்து தண்டனைக்காலம் குறைக்கப்படலாம்

**-சிறைச்சாலைத் திணைக்களம் அறிவிப்பு**

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக 2 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஐ.தே.கட்சி பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.பி. திஸாநாயக்கவின் தண்டனைக்காலம் சிறையிலிருக்கும் போது அவரின் நடத்தைக்கேற்ப ஒன்றரை வருடமாகக் குறைக்கப்படலாம் என சிறைச்சாலைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

திஸாநாயக்க அங்கு பணிக்கப்படும் வேலைகளை ஒழுங்காகச் செய்தாலும் அதிகாரிகளின் நம்பிக்கைக்குள்ளானாலும் திணைக்களம் வழங்கும் புள்ளிகளைக் கவனித்துச்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சவாலை எதிர்கொள்ளத் தயார் கடற்படைத்தளபதி தயாசந்தகிரி சூளுரைப்பு

எந்தவிதமான இராணுவச் சவாலை எதிர்கொள்ளவும் கடற்படை தயாராகவுள்ளது என்று முப்படைகளின் பிரதானியும் கடற்படைத்தளபதியுமான தயாசந்தகிரி சூளுரைத்துள்ளார்.

கடற்படையின் 54 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். "தேசத்தின் இறைமையைக் காப்பாற்றும் பொருட்டு எமது படையினர் உயர் உசார் நிலையில் உள்ளனர். கடலில் மட்டுமல்லாது நிலத்திலும் எமது படையினரின் சமர்சக்தி விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் உருவாக்கப்பட்ட விசேட அதிரடிப்படைப்பிரிவு கடலிலும் தரையிலும் ஒரே வலுவுடன் செயற்படக்கூடியது. கடந்த காலங்களில் 'கடற்படையின் சக்தி நவீன ரக படைக்கலங்களாலும் யுத்தக் கப்பல்களாலும் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அதேவேளை, எமது அண்டை நாடுகள் எமக்கு அளித்துவரும் புலனாய்வுத்தகவல்கள், பயிற்சித்திட்டங்கள் மற்றும் இதர தேவைகளுக்கு நன்றியுடையவர்களாக உள்ளோம்"- என்றார். "ஒரு அரச படை என்ற வகையில் நாம் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைச் செம்மையாகக் கடைப்பிடித்து வருகிறோம்"- என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## யாழ்.ம.உ.ஆணைக்குழு அலுவலகத்தின் முன் நீதி கேட்டுஅன்னையர் முன்னணி உண்ணாவிரதம்

மனிதஉரிமைகள் தினமான இன்று யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினர் யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்னால் நீதிகேட்டு உண்ணாவிரத அமைதிப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

96 ஆம் ஆண்டு யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனவர்கள் சம்பந்தமான விபரங்களைக் கோரி இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துவதாக யாழ். மாவட்ட அன்னையர் முன்னணித் தலைவி செ.கனகாம்பிகை தெரிவித்தார்.

இன்று ஒளிவிளக்கேற்றி இவ் உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெறவுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் படையினர் முகாம்களில் மறைத்து வைக்கப்பட்டு இருந்தால் அவர்களை வெளிக்கொண்டுவரக்கோரியும் காணாமல் போனோருடையது என சந்தேகிக்கப்படும் புதைகுழிகள் தோண்டப்பட்டு அது தொடர்பான உண்மைகளை அரசு வெளியிட வேண்டுமென பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்து இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## கோரிக்கையை அரசு நிறைவேற்றாவிடின் போராடப்போவதாக ஜா.ஹெ.உறுமய மிரட்டல்

(கொழும்பு)

தமது கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றாவிடில் தாம் உண்ணாவிரதப் போரா ட்டத்தில் ஈடுபடப் போவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது. 12ஆம் திகதிக்கு முன் அரசு கோரிக்கைகளை நிறைவேற்றாவிடில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப் போவதாக கொட்டவல அமரவீர தேர தெரிவித்துள்ளார். தாம் 4 கோரிக்கைகளை முன்வைதது ள்ளதாகவும் அதில் முதல் கோரிக்கையான மறைந்த சோமதேரரின் மரணம் குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பது. இது மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏனைய கோரிக்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பட்டப் பகலில் வீடு புகுந்து யுவதி குத்திக் கொலை

**பருத்தித்துறையில் கோரச்சம்பவம்**

(பருத்தித்துறை)

பட்டப்பகல்வேளை வீட்டினுள் புகுந்து இனம்தெரியாதவர்களால் யுவதியொருவர்கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

முருகேசு எழிலரசி(வயது-22) என்பவரே கொலை செய்யப்பட்டுள்ளவராகும். வி. எம் றோட் பருத்தித்துறையைச் சேர்ந்த இந்த யுவதி பத்து கத்திக்குத்துக்காயத்திற்கு மேல் இலக்காகி மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுள்ளார். வயிற்றுப் பகுதியில் நான்கு குத்துக்களும்,

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் படையினரின் ரோந்து நடவடிக்கை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சியில் உள்ள பல பகுதிகளிலும் சிறிலங்கா படையினர் தமது ரோந்து நடவடிக்கைகளை கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளதுடன், மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் வழமைக்கு மாறாக ஏராளமான படையினர் குவிக்கப்பட்டு கடமையில் ஈடு டுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் வடமராட்சியின் பொற்பதி, குடத்தனை, மணற்காடு, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை போன்ற பகுதி கடற்கரை ஓரங்களில் பாதுகாப்புக்களைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளிலும், கடல் ஓரக் காவலரண்கள் மற்றும் மினி

(IV ஆம் பக்கம் பார்க்க)

முன்னாள் பா.உ.தங்க வடிவேலின்

## மெய்க்காப்பாளரான போலிஸ்கான்ஸ்டபிள் நேற்று மாலை சுட்டுக் கொலை

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தம்பிராஜா தங்கவடிவேலின் மெய்க் காப்பாளரான பொலிஸ் கான்ஸ்டபிள் சின்னத்துரை கைலேஸ்வரன் (வயது 40) நேற்று மாலை 6.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இவர் கடந்த 3 வருடங்களாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தம்பிராஜா தங்கவடிவேலின் மெய்க்காப்பாளராகப் பணியாற்றி வந்துள்ளார். நேற்று மாலை மட்டக்களப்பு நகரிலிருந்து தனது உந்துருளியில் பாரதி

(IV ஆம் பக்கம் பார்க்க)

# உந்துருளி மோதி மாணவி படுகாயம்

சரசாலைப் பகுதியில் பாடசாலைக்குச் சென்ற மாணவி மீது உந்துருளி மோதியதில் மாணவி படுகாயம் அடைந்துள்ளார்.

காலை 8.30 மணியளவில் பாடசாலைக்கு நடந்து சென்ற கனகரட்ணம் சயின்சியா வயது - 11, சரசாலை தெற்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த மாணவி மீதே லொறியை முந்திச் செல்ல முற்பட்ட உந்துருளி மோதியதில் மாணவியின் தலைப்பகுதியில் பெரும் காயம் ஏற்பட்டு, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக, அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, உந்துருளியில் பின்னால் இருந்து பயணம் செய்த பெண் தவறி விழுந்து படுகாயம் அடைந்துள்ளார். கொடிகாமத்தைச் சேர்ந்த மார்க்கண்டு மங்கையர்கரசி (வயது-49) என்பவரே படுகாயமடைந்துள்ளவராவர். (28)

## முக்கிய அறிவித்தல்

அறிவியல் நகர்ப் பிரதேசம் பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய கல்வி சார் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பிரதேசமாகும். இங்கு மணல், மண் ஆகியவற்றினை அகழ்வதற்கும், ஏற்றிச் செல்வதற்கும் தடை விதிக்கப்பெற்றுள்ளது. இத்தடையினை மீறிச் செயற்படுபவர்களுக்கு ரூபா 5.000.00 தண்டப்பணமாக அறவிடப்படுமென்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒப்பம், பொன். நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி. (சி-11017)

## புத்தக கண்காட்சியும் விற்பனையும்

எமது நிறுவனத்தால் நவம்பர் 22முதல் 30 வரை நடாத்தப்பட்டுக்கொண்டிருந்த மேற்படி கண்காட்சியும் விற்பனையும் டிசம்பர் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வன்னி வாழ்மக்களும், பொது நிறுவனங்களும் பயன் பெறும் வண்ணம் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட அனைத்து வகையான தமிழ், ஆங்கில புத்தகங்களும் உள்நாட்டு வெளியீடுகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

சிறிலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 021 2222573

(5358)

# சிறந்த விவசாயிகள் நேற்று கிளிநொச்சியில் கௌரவிப்பு



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயப் போதனாசிரியர் பிரிவு ரீதியாக தெரிவு செய்யப் பெற்ற சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக் களத்தில் (விரிவாக்கம்) நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கல விளக்கினை விவசாயப் போதனாசிரியர் செல்வி இ.கேமா ஏற்றி வைக்க தமிழீழத் தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறையைச் சார்ந்த மயூரன் ஏற்றிவைத்தார்.

பொதுச்சுடர் ஏற்றலினைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின. தலைமையுரையினையடுத்து சிறப்புரைகள் இடம்பெற்றது. சிறப்புரையினை கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன எந்திரி கந்தசாமி, முல்லை மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன், உதவி விவசாயப் பணிப்பாளர்(விதைகள்) சதீஸ்குமார், கால்நடைகள் சுகாதாரதிணைக்கள போதனாசிரியர் பத்மநாதன், ஆராய்ச்சி பகுதி உத்தியோகத்தர் சிவநேசன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், கிளி.அரச அதிபர் தி.இராசநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்து தெரிவு செய்யப் பெற்ற விவசாயிகளுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம மற்றும் சிறப்பு விருந்தினர்கள் வழங்கினர்.

கிளிநொச்சி. மாவட்டத்தில் பிரதேச ரீதியாக தெரிவு செய்யப் பெற்ற 65 விவசாயிகள் மேற்படி நிகழ்வில் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(சோ,சு)

## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

சிலா[illegible]த்தையைச் சேர்ந்த இராமசாமி-பொன்னுச்சாமி என்பவரின் தேசிய அடையாள அட்டை முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் A-9 பிரதான சாலையிலுள்ள ஈழநாதம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். (சு)

## உயர்பட்டப் படிப்புக்கள் பீட ஆய்வு அமர்வுகள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீட ஏற்பாட்டில் எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் வரையில் 3 வேறுபட்ட தலைப்புகளின் கீழ் ஆய்வு அமர்வுகள் நடைபெறவுள்ளன. துறைசார்ந்த ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர். ஆய்வுக் கட்டுரைகளை உள்ளடக்கிய இரு நூல்கள் ஆரம்ப நாளான சனிக்கிழமை வெளியிடப்படவுள்ளன.

பட்டப்பின் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் இதில் கலந்து கொள்ளுமாறு இதன் இணைப்பாளர் கலாநிதி செ.இளங்குமரன் கேட்டுள்ளார்.

## அறிவித்தல்

2005ஆம் ஆண்டு மணல் அகழ்ந்து ஏற்றுவதற்கான வாகனங்களுக்கான பதிவு மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பெற்றுள்ளது. பதிவு பெற்றுள்ள வாகன் உரிமையாளர்களுக்கு மாத்திரமே மணல் அகழ்வதற்கும், ஏற்றுவதற்குமான அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். எனவே, ரூபா 500.00 செலுத்தி உரிய பதிவினை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.

ஒப்பம், பொன். நித்தியானந்தம்,
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேச சபை,
கிளிநொச்சி. (சி-11016)

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

university Of Jaffna entertan applications From suitably qualified Persons up to 31.12.2004 for the under mentioned post

***PHYSICAL EDUCATION UNIT***

**VISITING INSTRUCTOR INSPORTS**

Badminton (Men)/Chess (Men)/ Chess (Women)/ Gymnastic (Men)/ Karate (Men)/ Table tennis (Men)/ Table tennis (Women)/ tennis (Men) Thachchi (Men)/ Volleyball (Men)/ELLe (Men)/ Elle (Women)

Rate of Payment-Rs.75/-per hour

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/ Establishments, either in person or by post, on a payment of Rs.20/- per form. Those who wish to obtain application forms by post are requested to send a money order /postal Order drawn in favour of the **Bursar, University of jaffna** together with a **self-addressed stamped envelope** 23x10 c.m.insize.

Those who wish to apply for more than one field should apply in separate forms for each field.

* Applicants from the University System/ Govemment, Departments/ Corporations and statutory Board should channe their applications through the Heads of respective Institutions.

applictations rceived atter the closing date will be rejected without intimation.

VICE CHANCELLOR
2004 (சி.11015)

## எழுதுனர் பயிற்சி நெறிக்கான வேண்டுகை

பின்வரும் தகமையுடைய ஆண்/பெண் இருபாலாரிடமும் எழுதுனர் பயிற்சி நெறிக்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

### தகைமைகள் :

**01. கல்வித் தகைமை:-**

- ❊ க.பொ.த. சாதரண தரத்தில் தமிழ் கணித பாடங்கள் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும். அல்லது
- ❊ க.பொ.த. சாதரண தரத்தில் தமிழ் கணித பாடங்களில் சித்தியடைந்தவராகவும், க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**02. அகவை:-**

18 தொடக்கம் 25 வரை.

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் : 31.12.2004
02. விண்ணப்பத்தாரருக்கான நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள் 12.01.2005 அன்று காலை 09.00 மணிக்கு.
03. நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம் : போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு, நடுவப்பணியகம் கிளிநொச்சி. (கிளி/மகாவித்தியாலயம் அருகாமை)
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருபவர் தங்கள் கல்வித் தகமைச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பிற தகைமைச் சான்றிதழ், குடும்பப் பதிவு அட்டை என்பனவற்றுடன் வருகை தருதல் வேண்டும்.
05. பயிற்சிக் காலத்தில் தங்குமிட வசதி வழங்கப்படுவதுடன் உதவு தொகையாக மாதம் ஒன்றுக்கு 4000 ரூபா வீதம் வழங்கப்படும்.
06. இப்பயிற்சிக் காலம் 06 மாதகாலத்திற்கு வழங்கப்படும்.
07. பயிற்சி முடிவின் பின்னர் அவர்களின் தகைமைக்கேற்ப பணியமர்த்தப்படும்.

விண்ணப்பப் படிவத்தின் மாதிரி:

*01) விண்ணப்பத்தாரியின் முழுப்பெயர் :-*
*02) பிறந்த / ஆண்டு / மாதம் / திகதி :-*
*03) தேசிய அடையாள அட்டை இல. :-*
*04) விண்ணப்பதாரியின் முகவரி :-*
*05) க.பொ.த. சாதரண தகைமைகள் :-*
*06) க.பொ.த. உயர்தர தகைமைகள் :-*
*07) பிறகல்வித் தகைமைகள் :-*
*08) குடும்ப விபரம் :-*

விண்ணப்பம் அனுப்ப வேண்டி முகவரி:-
**மேலாளர்,**
திட்டமிடல் பகுதி,
நடுவப் பணியகம்,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு,
கிளிநொச்சி. (சி10958)

# எமது மண்ணில் 35 ஆயிரம் படையினர் இன்னும் ஏன் இருக்க வேண்டும்?



## -சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பாப்பா

உயர்பாதுகாப்பு வலயம் என காரணம் கூறி தமிழ் மக்களை தாயக மண்ணிலிருந்து வெளியேற்றிய இராணுவம் அந்த இடங்களில் இராணுவத்துக்கான விளையாட்டு மைதானங்களை அமைத்துள்ளது. எமது தமிழ் மண்ணில் இந்த 35 ஆயிரம் படையினர் இன்னும் ஏன் இருக்கவேண்டும்? என்று தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா விசனம் தெரிவித்துள்ளார்..

"தேசியத் தலைவரின் சிந்தனையில் தமிழீழ விளையாட்டுத் துறை" என்ற சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பாப்பா மேலும் பேசியதாவது; கடந்த காலத்தில் சிங்கள இராணுவத்தினர் நிகழ்த்திய அழிவுகள், அட்டகாசங்கள், அட்டூழியங்கள் கொடுமைகளை எமது இனத்தவர்கள் இலகுவில் மறந்துவிட மாட்டார்கள். அண்மையில் வல்வெட்டித்துறை மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டு இறந்து கிடந்தனர். அது ஏன் இடம்பெற்றது?. தமிழினத்தின் மைந்தனாகப் பிறந்தபடியால் தான். இந்த எதிரியின் அழிவுகளை 16, 17 வயதுகளிலேயே உணர்ந்ததால்தான் தேசியத்தின் தலைவனாக இன்று எமது தலைவர் பிரபாகரன் அவதரித்துள்ளார். சிங்கள இராணுவ அதிகாரிகளை எமது இனத்தினை அழிப்பதற்கென கடந்த காலங்களில் சிங்கள அரசு அனுப்பி வைத்துப் பார்த்தது. ஆனால், எமது தலைவரின் மனோபாவத்தினால் எமது இனத்தினை அழிக்கமுடியாது திணறுகின்றனர். எமது தேசியத்தின் விடுதலை எமது தலைவரின் கையில்தான் உள்ளது. இனத்தின் விடுதலைப் போராட்டம் நீண்ட தூரமாகச் சென்றால், எமக்குப் பாதகமானதாக முடியும். எமது போராட்டத்துக்குள் பிளவுகளை ஏற்படுத்துவதற்கு எதிரிகளும், உலகமும் திரண்டு நிற்கின்றன. இந் நிலையில், எமது தேசத்தின் விடுதலையை, சுபீட்சத்தைக் கட்டிக்காக்க அனைவரும் தலைவரின் பின்னால் அணிதிரள வேண்டும் என்றார் அவர். சஞ்சிகை வெளியீட்டு விழா யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

## முல்லை. பிரதேச வாகனங்களுக்கு 2005 ஆம் ஆண்டிற்கான வரி அட்டை வழங்கல்

தமிழீழ மோட்டார் ஊர்தி பதிவுப்பகுதியினரால் முல்லைத்தீவு பிரதேசத்திற்குட்பட்ட அனைத்து வாகனங்களுக்கும் 2005 இற்கான வரி அட்டைகள் வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

மேற்படி நடவடிக்கை நாளை போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் முல்லைத்தீவுப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதென தமிழீழ மோட்டார் ஊர்தி பதிவுப் பகுதியினர் தெரிவித்துள்ளனர் (சோ,சு)

## நேர்மையைக் கடைப்பிடித்த மாணவனுக்கு வெகுமதி

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இயக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அலுவல் சம்பந்தமாய் வருகை தந்த அரச காப்புறுதி அதிகாரி ஒருவர் இப்பாடசாலையில் தவறவிட்ட தங்க மோதிரம் இப்பாடசாலையில் தரம் 7 இல் பயிலும் நவரட்ணம் நவசீலன் என்ற மாணவனால் கண்டெடுக்கப்பட்டு, ஒப்படைக்கப்பட்டது. இந்த மாணவனின் நேர்மையையும், ஒழுக்கத்தையும் பாராட்டி அந்த அதிகாரி ரூபா 500 வெகுமதி அளித்ததுடன், பாடசாலை அதிபர் திருமதி இராஜரட்ணம் அவாகளும் மற்றும் ஆசிரியர்களும் இந்த மாணவனின் நேர்மையையும்,உண்மையான நடத்தையையும் பாராட்டியுள்ளனர். (28)

## கோயில்வயல் மக்களுக்கு 3 இலட்சம் ரூபா மேஜர் செங்கோலனின் தந்தை அன்பளிப்பு

மேஜர் செங்கோலனின் தந்தையாகிய பொன்னுத்துரை என்பவர் இயக்கச்சி கோயில்வயல் கிராம அலுவலர் பிரிவில் உள்ள 120 குடும்பங்களிற்கு மூன்று இலட்சம் ரூபா நிதியினை நன்கொடையாக வழங்கியுள்ளார். குடும்ப அங்கத்தவர் விகிதப்படி ஒரு அங்கத்தவரிற்கு ஆயிரம் ரூபாவும், இரண்டு அங்கத்தவர்களிற்கு ஆயிரத்து ஐந்நூறு ரூபாவும் மூன்று அங்கத்தவர்களிற்கு இரண்டாயிரம் ரூபாவும், நான்கு அங்கத்தவர்களிறகும் அதற்கு மேற்பட்டவர்களிற்கு மூவாயிரம் ரூபாய்படி மூன்று இலட்சம் ரூபா நிதியினை நேற்று மாலை 2.00 மணியளவில் மேஜர் செங்கோலனின் கலாமன்றத்தில் வைத்து வழங்கியுள்ளார். இந்நிகழ்வில் பளை கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வின்சன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தார். அத்துடன் செங்கோல் கலாமன்றத்திற்கான இவ்வாண்டு நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது. இந்நிர்வாகத்தின் தலைவராக செ.விக்னேஸ்வரனும் செயலாளராக மா.தேவராசாவும் பொருளாள ராக வி. ராசதுரையும் உப தலை வராக சி.கமலராணியும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் ஐந்து பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. எதிர்வரும் 24.12.04 அன்று செங்கோலனின் நினைவாக இரவு செங்கோலன் இசைக்குழுவும்,பல கலை நிகழ்வுகளும் இயக்கச்சி கோவில் வயல் செங்கோல் கலா மன்றத்தில் இடம்பெற ஏற்பாடாகி யுள்ளது(11)

## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழக புகுமுக மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 12.12.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு பல்கலைக் கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெறும் அனைத்துப புகுமுக மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி. மாவடட் பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுக்கொள்கின்றார்.


## கனகபுரம், ஆனந்தபுரம் சீர்திருத்தப் பிரிவுகளுக்கு ச.செ.சங்கம், யுனிசெப் பிரதிநிதிகள் விஜயம்!


(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ காவல்துறையின் கனகபுரம் சீர்திருத்தப் பிரிவிற்கு சர்வதேச செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதிகள் கடந்த முதலாம் திகதியும், புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்திலுள்ள சீர்திருத்தப் பிரிவிற்கு கடந்த 7ஆம் திகதியும் யுனிசெப் பிரதிநிதிகளும் நேரில் சென்று அங்குள்ள அதிகாரிகளையும் தடுப்பிலுள்ளவர்களையும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

கடந்த முதலாம் திகதியன்று கிளிநொச்சி கனகபுரம் சீர்திருத்தப் பிரிவிற்கு விஜயம் மேற்கொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கிளி. மாவட்ட வதிவிடப் பிரதிநிதி பமிலா, மொழிபெயர்ப்பாளர் டங்கன் ஆகியோர் தமிழீழ காவல்துறை சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர் சொ. நரேன், தமிழீழ காவல்துறை நிர்வாக உத்தியோகத்தர் இரங்க நாதன், கனகபுரம் சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர், உபபரிசோதகர் சசிதரன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் தடுப்பிலுள்ளவர்களையும் சந்தித்து அவர்களது நலன்களையும் கேட்டறிந்தனர்.

அதேபோன்று கடந்த 7ஆம் திகதியன்று புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் சீர்திருத்தப் பிரிவிற்கு விஜயம் மேற்கொண்ட யுனிசெப் பிரதிநிதி பற்றீசியா, சட்டத்தரணி கங்காதரன் ஆகியோர் சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர், ஆனந்தபுரம் பிரிவுப் பொறுப்பாளர் உபபரிசோதகர் திருக்குமரன், ஆனந்தபுரம் சீர்திருத்தப் பிரிவு மகளிர் பொறுப்பாளர் தலைமைக் காவலர் நிமல்ராணி ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் தடுப்பிலுள்ளவர்களிடம் அவர்களது நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடிச் சென்றுள்ளனர். (சோ,சு)





### புத்தளம், குருநாகலில் பேருந்து மீது தாக்குதல் எதிரொலி

## வவு-கொழும்பு தனியார் பேருந்து சேவை நேற்று நடைபெறவில்லை!

வவுனியாவில் இருந்து கொழும்புக்கு நடத்தப்படும் தனியார் பயணிகள் பேருந்து சேவை நடத்தப்படாததால் பயணிகள் பெரும் சிரமத்திற்கு முகம் கொடுத்து வவுனியாவில் காத்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி நடத்தப்படும் பேருந்து மீது குருநாகல புத்தளம் பகுதியில் வைத்து அப்பகுதி உள்ளூர் பேருந்து நடத்துனர்கள் மக்களோடு இணைந்து தாக்குதல் நடத்துகின்றனர்.

இதன் காரணத்தினால் பேருந்து நடத்துனர்கள் தமது பேருந்து வண்டியினை கொண்டு செல்வதற்கு தயங்குவதாகவும், இதன் காரணத்தினால் வவுனியா பேருந்து நடத்துனர்கள் நேற்று வேலை நிறுத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டு இருப்பதாக வவுனியா தனியார் பேருந்து நடத்துனர்கள் தெரிவித்தனர். தங்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும் பட்சத்திலேயே தம்மால் பேருந்து சேவையை நடத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளனர். நேற்று முன்தினம் இரவு கொழும் பில் இருந்து வவுனியா நோக்கி வந்த இரண்டு பஸ்கள் தாக்கப்பட்டு உள்ளன . இதன் போது பேருந்து வண்டிகளின் கண்ணாடி உடைந்திருப்பதாகவும் அதையும மீறி தாங்கள் பேருந்து சேவைநடத்துகின்ற போது தமதும் பிரயாணிகளினதும் உயிருக்கு உத்தரவாதம் கிடைக்காத நிலை ஏற்படும் என்று தனியார் பேருந்து சங்கத்தினர் தெரிவிக்கின்றனர். இன்றய சேவை புறக்கணிப்பால் யாழ்ப்பாணத்திலிருந்தும் வன்னிப்பகுதியில் இருந்தும் வந்த பெருமளவான பிரயாணிகள் நீண்ட நேரமாக வவுனியாவில் காத்திருந்தனர். தொடரூந்திலும் போதிய இடம் இல்லாமையால் பிரயாணிகள் பெரும் அசௌகாயங்களுக்கு முகம் கொடுத்தார்கள்.

## வல்வையில் இரு இளைஞர் கொலையை நேரில் கண்ட இருவரிடம் வாக்குமூலம்

வல்வெட்டித்துறையில் இளைஞர் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை நேரில் கண்ட சாட்சிகள் இருவர் நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜராகி தமது வாக்குமூலங்களை அளித்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிசார் சாட்சியங்களை நீதிமன்றில் நெறிப்படுத்தினர். எனினும் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் வாக்குமூலங்கள் எதனையும் சாட்சிகள் தமக்கு வழங்கவில்லை என பொலிசார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர். இதனை அடுத்து இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக பொலிசாருக்கும் வாக்குமூலங்களை அளிக்குமாறு நீதவான் சாட்சிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

## வெண்பட்டி தினம் கிளி.இலும் சிறப்பாக அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

சர்வதேச ரீதியாக கொண்டாடப்பட்ட வெண்பட்டி தினம் கிளிநொச்சியிலும் மிகச்சிறப்பாக கொண்டாடப் பட்டுள்ளது.

நேற்றுக் காலை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை மகளிர் அரசியல் துறை துணைப்பொறுப்பாள் கீதா ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சிப் பிரதேச பொறுப்பாளர் போர்ப் பிரியன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து பொதுச்சுடரினை பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சத்தியமூர்த்தி,திட்ட உத்தியோகத்தர் பகீரதன், அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் இ.கணேசபிள்ளை, அன்னை இல்லத்தை சேர்ந்த யசோதரன், புனர்வாழ்வுக்கழத்தை சேர்ந்த ஜறான் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தை சேர்ந்த தனுசியா தலைமையில் நடைபெற்ற நிகழ்வுகளில்,வரவேற்புரையினை உழைக்கும் மகளிர் அபிவிருத்தி புனர்வாழ்வு சங்கத்தைச் சேர்ந்த தேவிசா நிகழ்த்தினார். தலைமையுரையினை தொடர்ந்து, இணையத்லைவர் கணேஸ் அவர்களின் உரை இடம்பெற்றது.

அடுத்த சிறப்புரையினை அரசியல் துறை மகளிர் துணைப் பொறுப்பாளர் கீதா ஏற்றினார். தொடர்ந்து விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தன்,அன்னை இல்லத்தை சேர்ந்த யசோதரன், போராளி தமிழ்க்கவி,பகீரதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து அழகியல் கலாமன்ற மாணவர்களின் நாடகம் நடைபெற்றது. பின்னர் மக்கள் சார்பில் சிலர் உரையாற்றினார்கள். நன்றியுரையினை தவப்புதல்வி ஆற்றி நிகழ்வினை நிறைவு செய்தார்.இந்த வெள்ளைப்பட்டி தின நிகழ்விற்கு பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டு அனைத்து பெண்களுக்கும் எதிரான வன்முறைகளையும் ஒழிப்பதற்கு ஒன்றிணைய வேண்டும் என்பதை வெளிக்காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கு)

# மீள் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கக் கோரி

# யாழ்.செயலகம் முன் மக்கள் மறியல் போர்

## செயலகப் பணிகள் தடைப்பட்டன

(யாழ்ப்பாணம்)

அரசினால் ஏற்கனவே உறுதிவழங்கப்பட்டவாறு மீள் குடியமர்வுக்கான உதவித் தொகை கொடுப்பனவில் தாமதம் காட்டப்படுவதாக மக்கள் யாழ்.செயலகம் முன்பாக நேற்று மறியல் போராட்டமொன்றை நடாத்தினர். இதனால் யாழ். செயலகத்தின் அன்றாடப்பணிகள் நண்பகல் வரை முற்றாக முடங்கிப் போயிருந்தது.

2000ஆம் ஆண்டின் முற்பகுதியில் முற்றாக இடம்பெயர்ந்திருந்த வறணி இடைக்குறிச்சி மற்றும் கரம்பைக் குறிச்சி கிராம மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்டசமாதான சூழலையடுத்தே மீளக்குடிமர்ந்திருந்தனர்.

இதனிடையே தமதுசொந்த இடங்களில் மீளக் குடியேறும் குடும்பங்களிற்கு,மீள் குடியமர்வுக் கொடுப்பனவாக ரூபா 25 ஆயிரம் (25000)வழங்கப்படுமென அரசு அறிவித்திருந்தது. இதன் பிரகாரம் மீளக்குடிமர்ந்த குடும்ங்பகள் பல வற்றிற்கும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்பட்டிருந்தபோதும் வறணி பகுதி மக்களிற்கு அது வழங்கப்பட்டிக்கவில்லை.

இது தொடர்பில் "தமது பிரதேசசெயலகமான தென்மராட்சிப்பிரதேச செயலகத்திற்கு பொதுமக்களால் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் உரிய தீர்வெதுவும்கிட்டாத நிலையிலேயே யாழ்.செயலகம் முன்பாக இம்மறியல் போராட்டத்தை மேற்கொண்டதாக" ஏற்பாட்டாளர்கள் தரப்பில் கூறப்பட்டது. பிரதான வழிகளை மூடி காலை 6.00 மணிமுதல் மேற்கொள்ளப்பட்ட இம் மறியலின் போது பணியாளர்கள் எவரும் உள்ளே செல்ல அநுமதிக்கப்படவில்லை. இந்நிலையில் மதியம் அங்கு வருகை தந்த மேலதிக அரச அதிபர் செ.சிவசாமி எதிர்வரும் 18 ஆம் திகதியினுள் இக்கொடுப்பனவுகளை வழங்க நடவடிக்கை எடுப்பதாக போராட்டக்காரர்களிற்கு உறுதியளித்ததையடுத்து நண்பகலுடன் அது கைவிடப்பட்டது. 300 இற்கும் மேற்பட்ட மக்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (27,41, 33)

-செயலமர்வுக் கருப்பொருளுக்கு வெளியில் சென்று-

# விடுதலைப்புலிகளைக் குற்றம் சாட்டி பேசியதால்

# ஈ.பி.டி.பி.பிரதிநிதி மேடையிலிருந்து இறக்கப்பட்டார்

கொழும்பு கொப்பேக்கடுவ கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தில் இடம் பெற்ற அதிகாரப் பகிர்வு, இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஓர் மார்க்கமாகும் என்னும் விடயம் சம்பந்தமாக இடம்பெற்ற செயலமர்வில் ஈ.பி.டி.பி.கட்சியின் பிரதிநிதி உரையாற்றும் போது சபையிலிருந்து எதிர்ப்புக் காட்டப்பட்டது.

ஈ.பி.டி.பி.அமைப்பின் ஆலோசகரான கலாநிதி விக்னேஸ்வரன் உரையாற்றும் போது, இலக்குக்கு வெளியால் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளை குற்றம் சுமத்த முற்பட்ட போதே எதிர்ப்புக்காட்டப்பட்டது.

சமஷ்டி, அதிகாரப்பகிர்வு சம்பந்தமான கலந்துரையாடலில் இவற்றுக்குப் புறம்பாக தனிப்பட்ட இலாபங்களைக் கருத்தில் கொண்டு கருத்துக்களைக்கூற முற்பட்டதாலேயே சபையில் இருந்தவர்களினால் கைதட்டி மேடையில்இருந்தும் இறக்கப்பட்டார்.

மேடையில் இருந்து இறங்கிய காலநிதி விக்னேஸ்வரன் உடனடியாகச் சபையில் இருந்தும் தனதுபாதுகாப்பு உத்தியோகத்தர்களுடன் வெளியேறி விட்டார். சிங்கள மக்களும் இவரின் உரையையிட்டு கண்டனம் தெரிவித்தனர். இரண்டு நாள் வதிவிட செயலமர்வு கடந்த 4ஆம்,5ஆம் திகதிகளில் கொழும்பு விஜேராம வீதியில் உள்ள கொப்பேக்கடுவ கமநல ஆராச்சிப் பயிற்சி நிறுவனத்தில் இடம்பெற்றது.

இச்செயலமர்வை சனநாயக உரிமைகளை காப்பதற்கான இயக்கமும் சனநாயகத்திற்கும் சிறுபான்மை உரிமைகளுக்கும் மற்றும்மோதல்களைத் தவிர்ப்பதற்குமான கூட்டமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. வன்னிப்பிரதேசமான கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்தும் சுமார் 50பேர்வரையில்இச் செயலமர்வில் கலந்து கொண்டனர். (41)

## கிளி. கலாசார மண்டபத்தில் இன்று ம.உரிமைகள் தின நிகழ்வு

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று வட-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினால் கிளிநொச்சி கலாசார மண்டபத்தில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வு கொண்டாடப்படவுள்ளது. இன்று காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில் "இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் நிலைப்பாடு" என்ற விடயம் பற்றி கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

### யாழ்.ம.உ...

இவ் அமைதியான உண்ணா விரதப் போராட்டம் சர்வதேச மனித உரிமைகள் நாளில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதேநேரம் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளும் படியும்வேண்டியுள்ளனா. (41, 33, 27)

### மெய்க்காப்பாளரான...

ஒழுங்கையிலுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த சமயம் கிளேனி ஒழுங்கையில் வைத்து வழி மறித்த இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். மார்பிலும், கழுத்திலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. வீதியில் சடலமாகக் கிடந்த இவரது இடுப்பில் கடமையின் நிமித்தம் வழங்கப்பட்ட கைத்துப்பாக்கி இருந்த போதிலும் கொலையாளிகள் அதனை எடுத்துச் செல்லவில்லை என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

### மகேஸ்வரனின்....

அவர் எழுப்பினார். தனது பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் அனுப்பியுள்ள அறிக்கையில்

தனது வீ்.டை அண்மித்த பகுதிகளில் சிவில் உடையில் ஆயுதம் தரித்தவர்களின் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் காணப்படுகின்றன. இப்படியான சூழ்நிலையில் எனது பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது. இந் நிலையில் எனது பாதுகாப்பிற்கு ஏதாவது அச்சுறுத்தலோ அல்லது பாதிப்போ ஏற்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் சிறிலங்கா அரசாங்கமும், சனாதிபதியும்தான் ஏற்கவேண்டும். எனது பாதுகாப்பை திரும்பப் பெறுவது பற்றி நேற்றுமுன்தினமிரவு அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவிற்குப் பொறுப்பான பணிப்பாளர் என்னுடன் தொடர்பு கொண்டு உடனடியாக திரும்பப்பெற வேண்டிய நிலை என்றார். சிறிது கால அவகாசம் தாருங்கள் எனக் கேட்டபோது மேலிடத்தின் அழுத்தம் காரணமாக உடனடியாக வாபஸ் பெற வேண்டிய நிலை என அந்த அதிகாரி என்னிடம் கூறினார். இந்த விடயம் தொடர்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்திற்கு நான் கொண்டுவரப் போகின்றேன் என்றும் அந்த அறிக்கையில் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

### பட்டப்பகலில்....

கழுத்துப் பகுதியில் மூன்று வெட்டுக்காயம், மார்புப் பகுதியில் கத்தியால் குத்திக் கிழிக்கப்பட்ட பல காயங்களும் காணப்படுகின்றன.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, நேற்றுக்காலை 11.30 மணியளவிலேயே வீட்டில் யாருமில்லாத வேளை தொலைக்காட்சியில் நாடகத்தைப் பார்த்தவண்ணம் சமையல் அறையில் மதிய உணவு சமைத்துக்கொண்டிருந்தபோது வீட்டின் பின்புறத்தேயுள்ள வெள்ள வாய்க்கால் ஊடாக வீட்டுக்குள் நுழைந்த இனந்தெரியாத நபராலேயே இக்கொடூரம் நிகழ்த்தப்பட்டுள்ளது.

வீட்டினுள் புகுந்த நபர் தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தத்தை அதிகரித்துவிட்டே மேற்படி கொடூரத்தை நிகழ்த்தியுள்ளார். இதனால் அயலவர் எவருக்கும் தெரியாது போயுள்ளது. வெளியே சென்று திரும்பிய சகோதரியார் சமையலறையினுள் புகுந்த சமயம் தங்கை இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டு அலறியடித்துக்கொண்டு வெளியே வந்தபோதே 12.15 மணியளவிலேயே அயலவர்களுக்குத் தெரியவந்துள்ளது. மேற்படி யுவதியின் பிரேதம் மந்திகை வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்குட்படுத்தியபின் மாலை 6.30 மணிக்கு பெற்றோரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறைப் பொலிசார் தடயங்களைப் பதிவுசெய்து 3.00 மணிக்கு பின்னரே உறவினர்களை உட்செல்ல அனுமதித்தனர். (33,27,28)

### எஸ்.பியின்...

சிறைச்சாலை விதிகளின்படி விசேட மன்னிப்பின் மூலம் அவருக்குத் தண்டனைக் காலம் குறைக்கப்படலாம் என திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த விசேட மன்னிப்பு மரண தண்டனை பெற்றவர்களுக்கும் ஆயுள் தண்டனை பெற்றவர்களுக்கும் தவிர கடூழியச் சிறைத் தண்டனை பெற்றவர் களுக்கும் பொருந்தும் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

### வடமராட்சியில்...

முகாம்களை புனரமைத்தும் புதிய முட்கம்பி வேலிகளை இட்டும் பாதுகாப்பை அதிகம் பலப்படுத்தி வருகின்றனர்.

இது அப்பகுதி வாழ் மக்களிடையேயும், கடற்றொழிலாளர் களிடையேயும் பீதியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளன. (33)

### கோரிக்கையை....

கைகளான மதமாற்ற தடைச் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவரல், நவீன சந்தையில் மாதுபான விற்பனையைத் தடை செய்தல், சூதாட்டம் தடை செய்தல் என்பன நிறைவேற்றப் படவில்லை எனத் தெரிவித்துள்ளார்கள்.

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி இன்று வெளிவரும்

இவ் ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (உ/த) பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் அடுத்த ஆண்டு பல்கலைக்கழகங்களில் புகுவதற்கான தகைமையுடையவர்களின் வெட்டுப்புள்ளிகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இன்று வெளியிடுகிறது.

இவ் வெட்டுப்புள்ளிகள் தொடர்பான விபரங்கள் இணையத்தில் www.UCGac.LK என்ற முகவரியில் மாலை 4.00 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம்.

### த.தே.கூட்டமைப்பு...

நடைபெற்ற அமளி துமளி காரணமாக இவற்றிற்கான குழுநிலை விவாதம் வாக்கெடுப்பு எதுவுமின்றியே இவ் அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு ஏகமானதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு செய்தமை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமையை சபாநாயகர் மீறியமைக்கு ஒப்பான செயல் எனக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாகவே நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாறு செய்தார்கள்.

இதனால், சபை ஆரம்பிக்கப் பட்ட உடனேயே சபாநாயகர் சுமார் ஒரு மணி நேரத்திற்குச் சபையை ஒத்திவைக்க வே[illegible] நிலை நேரிட்டது.

இதன் பின்னர் சபாநாயகர் கட்சித் தலைவர்களின் கூட்டமொன்றிற்கு அழைப்பு விடுத்தார்.

ஆனால், கட்சித் தலைவர்களின் கூட்டத்திற்குப் பின்னர் அவை ஆரம்பமாகியபோது, சபாநாயகர் தான் வேண்டுமென்று பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் கோரிக்கையை உதாசீனம் செய்யவில்லையெனவும், நேறறு முன்தினம் நடைபெற்ற கலகத்தினால் அவரது கோரிக்கை உண்மையாகவே தனக்குக் கேட்கவில்லையெனவும், இதனால்தான் விவாதம், வாக்கெடுப்பெதுவும் இன்றியே இவற்றிற்கான நிதி ஒதுக்கப்பட்டது என்றும், இதனால், சிவாஜிலிங்கத்திற்கு ஏற்பட்ட மனத் தாக்கத்திற்குத் தாம் தனிப்பட்ட முறையில் மன்னிப்புக் கோருவதாகவும் கூறினார்.

நேற்றுப் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேந்திரன்

ஐ.தே.க. உட்பட பேரினவாதக் கட்சிகளைப் பொறுத்தவரை ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள். எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான சட்டங்கள் கூட இந்த கட்சிகள் வாக்கெடுப்பு இன்றிச் சபையில் நிறைவேற்றலாம்.

இதன் காரணமாக எமது சனநாயக உரிமைகளைப் பாது காப்பதற்காகவே இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது என்றார்.

இதேவேளை பாராளுமன்றத்தில் நேற்று அரசியல் விவகாரம் மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது.

ஆதரவாக ஆளும் கட்சியுடன் ஜாதிக ஹெலஉறுமய,இ. தொ.கா., சிறிலங்கா மு.கா. உட்பட 106 வாக்குகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த 22 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன.

ஐ.தே.க. வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இந்த அமைச்சுக்குரிய நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டுவிட்டது.


வெள்ளைப் பட்டி தினம்

நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரையும்

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிரான வன்முறைகளை இப்பொழுதே நிறுத்தி விடுவோம்.

பெ.அ.பு.நிறுவனம், ஒக்ஸ்பாம்

(சி-11007)


## சாவு அறிவித்தல்

### அமரர் முருகேசன் எழிலரசி

வீ.எம். றோட் பருத்தத்துறையைச் சேர்ந்த முருகேசன் எழிலரசி 09.12.2004 வியாழன் இன்று அகால மரணம் அடைந்துள்ளார். அன்னார் காலம் சென்ற முருகேசன், புனிதரத்தினம் ஆகியோரின் பாசமிகு மகளும், இளவரசி, உதயணன் (சுவிஸ்), குமணன் (சுவிஸ்), லச்சுமணன் (லண்டன்), இளவதனி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஐங்கரதாஸ்,குணசேகரன்,சுந்தரி ஆகியோரின் மைத்துனியும் ஆவர் அன்னாரின் [illegible] இல்லத்தில் இறுதிக் கிரியைகள் 12.12.2004 ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணிக்கு இடம்பெறும் என அறியத் தருகின்றனர். இதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முகவரி.**
**வீ.எம்.றோட்,**
**பருத்தித்துறை,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**நா.குணசேகரன்**
**(மைத்துனர்)**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.